




ஓலை 148| ஓசை 271| நவம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

அகர முதல இலக்கியப் பேரவை

தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

# திருக்குறள்

## குறள்

**எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்**

## பொருள்

**எண்ணியவர் (எண்ணியபடியே செயல் ஆற்றுவதில்) உறுதியுடையவராக இருக்கப்பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மாரி யல்லது காரிய மில்லை!

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

கடல்நீ ரின்றியே கார்முகி லில்லை;
அடைமழை கார்முகி லன்றி இல்லை;
நிலவும் கதிரும் நீங்கிய விண்ணாம்
உலகுமே இல்லை; உலகிலொ ளியில்லை;
மலையு மின்றியே மலையரு வியில்லை;
அலைக ளில்லா ஆழ்கட லில்லை;
ஆழ்கட லின்றியே ஆணிமுத் தில்லை;
பாழ்கிண றுந்தான் பாசி யின்றி
இருப்ப தில்லை; இருகரை யின்றி
இருக்கும் ஆறு மில்லை யெங்கும்;
உழவு மின்றி உணவு மில்லை;
உழவும் நீராம் உயிர்த்தி ரவமு
மின்றி உயிரும் இருப்ப தில்லை;
என்பதால் உலகில் எல்லாம் நீரே
முதன்மை இறையே முனைந்து காப்பீர்!
இதனால் நீராம் இலாவாழ் வேது?
உண்மை தன்னை உணர்ந்து
பண்பாய் மழைநீர் பாங்கின் காப்பே!






**இலக்கணக் குறிப்பு:**

அகவல் என்னும் ஆசிரியப்பா வகைகளில் ஒன்று நேரிசை ஆசிரியப்பா அடிதோறும் நான்கு நான்கு சீர்களாக எத்தனை அடிகளாலும் எழுத இயலும். ஆனால், ஈற்றடிக்கு முந்தைய அடியான ஈற்றயலடி மூன்று சீர்கள் வந்து ஈற்றடி நான்கு சீர்கள் வந்து ஈற்றுச்சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும். இரண்டிரண்டு அடிகளுக்கு ஓரெதுகையும், அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனைப் பெற்றும் ஈரசைச் சீர்களாகப் பற்றி வரும் மேலே உள்ள பாட்டு இவ்வாய்பாட்டில் அமைந்த நேரிசை ஆசிரியப் பாவாகும்

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

# எனது மௌனம்

வார்த்தைகளின்
பெருங்கூட்டத்தில்
மௌனத்தை காவலுக்கு
வைத்திருக்கிறார்கள்.

மௌனத்தின் காவலை
தகர்த்தெறிந்து விட்டு
கவிதையோடு விளையாட
வார்த்தைக்கு விருப்பமென்று
அறிந்து கொள்ள முடிகிறது
என்னால்.

காலத்தின் முடிச்சினை
இறுகப் பற்றி
வரமொன்றினைக் கேட்டு
கட்டாயத் தவமிருக்கிறேன்
நான்.

யார் கெட்டாலென்ன?
எது எப்படி போனாலென்ன?
என்று
இயல்பை மீறி
இருக்க முடியவில்லை
கடமை தவறாத
எனது மௌனத்தால்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

அலை அடித்தும்
சொல்வேன் ஆசையை

ஆர்ப்பரித்து செல்வேன்
என் அன்பை.

கூச்சிலிட்டும் சொல்வேன்
என் காதலை.

விழுந்தும் சொல்வேன்
விருப்பத்தை.

இதுவும் காதல்தான்

இப்படிக்கு
அலைகள்



கவிஞர் ஷகிலா, சென்னை

இப்போதும்
இப்படித்தான்
கதைகள் தொடங்குகின்றன

ஒரு கிராமத்தில்
கூலித் தொழிலாளி
ஒருவன் இருந்தான்
அவன் பொஞ்சாதியின் பெயர்
கருப்பாயி
அவன் வறுமையில் வாடினான்
இப்படியாக
கதை நீளுகிறது.



ஒரு ஊரில்
ஒரு பண்ணையார் இருந்தார்
அவர் மனைவியின் பெயர்
காமாட்சியம்மாள்
அவர் செல்வ செழிப்புடன் இருந்தார்
இப்படியாக
கதை நீளுகிறது.

இப்போதும்
இப்படித்தான்
கதைகள் தொடங்குகின்றன

கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# இதயம் இறந்த மனிதர்கள்

உண்மையோடு இருந்தவர்களை ஊமையாக்கிய மனிதர்கள்
உறவென்று பழகியவர்களை உதறித்தள்ளிய மனிதர்கள்
உயர்வாக வைத்ததற்கு உரக்கவே அடித்தவர்கள்
உடையாது காத்ததற்குத் தூள்தூளாய் உதிர்த்தவர்கள்

நலவுக்கு மேல் நலவு செய்ததற்கு
நரம்பில்லா நாவால் வந்ததெல்லாம் பேசினார்கள்
நலவுகள் அடையும் வரை  நண்பரென்றர்
நலவடைந்ததும் நண்பரா நீயென்றர்

அநீதி இழைத்து விட்டு நல்லவனாய் வேடமிட்டு
தானே சரியெனப் பிறரையும் நம்பவைத்து
அகந்தையில் மார் தட்டிக் கொண்டனர்
அதர்மத்திற்கு ஒன்று கூடி மகிழ்ந்தனர்

தவறென்று அறியாது செய்த சிறுதவறுக்கு
திருத்திச் சொல்லாது பறையடித்துத் திரிந்தனர்
திரியாயிருந்ததைப் பற்றவைத்துப் புகை  மூட்டினர்
திணறியதைப் பார்த்து உச்சிகொட்டி மகிழ்ந்தனர்

நம்பிக்கையாய்ச் சொன்னதை உலகறியச் செய்தனர்
நம்ப வைத்துக் கழுத்தை அறுத்தனர்
நாகரிகம் அறியா நல்ல மனிதர்கள்
நன்றி கெட்ட உத்தம புத்திரர்கள்



விதைக்க வேண்டிய நல்வார்த்தைக்குப் பதிலாகவே
பிறர் மனதை வார்த்தைகளால் வதைத்தனர்
புண் பட்டமனதோ அமைதியாக இருக்கவே
தவறனைத்தும் இவரே செய்தார் என்றனர்
இறைவன் இருப்பதையே மறந்த இதயங்கள்

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# அவளுக்கான நான்

எண்ணி எண்ணிக் கடத்திய காலங்கள்
எண்ணிலாடங்காதக்
காயங்களாக மாறியதேனோ
சொல்லால் சொல்ல முடியாதது
மனதில் ஆர்ப்பரிக்கிறது
சிந்திய நீர்த்துளிகளாக
பவள முத்துக்களாக
கரு மைப்பூசப்பட்டு
மின்னும் விண்மீன்தான்
உன் விழியா?
சிறையென்று தெரிந்தும் வீழ்ந்தேன்
உன் கருவிழிச் சூழற்றிய புயலில்
மீண்டு வர மனம் முயலவில்லை
ஏனென்றால், நான் கண்டது
வார்த்தைகளால் விவரிக்க முடியாத
அழகு அல்லவா
அவளது கருவிழிகள்.



உன் விழியில் கண்டது ஒன்றில்லை
எண்ணிலடங்கா வீண்மீன்
கூட்டங்கள் விவரிக்கும்
அற்புதத்தின் அற்புதமான
பேரழகையல்லவா கண்டேன்.

கவிஞர் குணா. க, மகாராஜபுரம்

திங்கட்செல்வன் பிறங்கடை கலங்க
இன்னல் இழைத்த ஆரூர் வேனில்
அகம் சுருக்கி சுற்றம் அறுத்து
தீராப் பகை விதைத்த தேரோட்டி.
பகை அறுத்து சுற்றம் காத்தான்
தண்பொழில் செழியன்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

திறத்தார்க்கு நல்லமேடை கிடைத்தல் வேண்டும்
திசையெங்கும் புகழ்பரவ களமும் தேவை

சிறப்புசெய்ய நல்மேடை இல்லா வேளை
செஞ்சுடராம் அறிவனைத்தும் முடக்கம் கொள்ளும்

வெறுமைகொண்டே வாழ்ந்திட்ட வல்லார் உண்டே
விலைபோகா உயர்பண்டம் என்றே ஆனார்

குறுகிட்ட சூழ்நிலையில் மாற்றம் செய்வீர்
குடத்திட்ட விளக்கினரே ஏற்றம் பெறுவீர்

நல்வாய்ப்பு யாவர்க்கும் ஒருநாள் உண்டு
நசுங்கிட்ட தரப்பிற்கும் எழுச்சி வருமே

தொல்லைகளில் மூழ்கிடாமல் விழித்தே எழுவீர்
தோல்வியெல்லாம் தொடர்கதையும் அல்ல உணர்வீர்

பல்விதமாய்ப் போட்டிகளும் என்றும் உண்டு
பாங்குற்றே கலந்திட்டால் வாய்ப்பும் வருமே

எல்லாமும் எல்லார்க்கே ; திறத்தை வளர்ப்பீர்
ஏற்றங்கள் கனவல்ல முயன்றால் நனவே



கவிஞர் ஆ சீ கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# புதினமானவர்களாய்

மனதை மயக்கும் வகையிலே
புத்தம் புதுப் பெயர்களிலே
அனாச்சாரங்களோ இன்று
எக்கச்சக்கமாய் உலா வருகையிலே
அழகாய் தான் தோன்றுகின்றன
ஆசைகளதையோ தூண்டிவிடுகின்றன
அடிமையாய் கூட மாற்றிவிடுகின்றன
பிரித்தறியா வகையிலே
அத்தனை பிணைப்புக்கள் அவற்றுக்குள்

கூடிக் கூடிப் பேசி
நிதர்சன உண்மைகளும் புரிந்தாலுமே
சொல்லும் நாவும்
சமூகத்தின் நடைமுறைகளென
அதற்குள்ளேதான் புரள்கையிலே
நாம் என்னதான் செய்வது
மனதால் வெறுப்பதைத் தவிர தவிர்ப்பதற்கு?



தவிர்த்தாலோ
நாம்தான் அங்கே புதினமானவர்களாய்
நாகரிகம் தெரியாதவர்களாய்
நடைமுறைக்கு பொறுந்தாதவர்களாய்
புது ஜந்தென விமர்சனங்கள் வேறு

கவிஞர் அறூபா அஷ்றலா, கல்முனை

# விருந்தோம்பல்

இல்லாளோடு இல்லத்தில் இருந்து அறவழியில் பொருளீட்டலே
நல்விருந்து வழங்கி விருந்தினரை சிறப்பித்திடவே

விருந்தினருக்கு வழங்காது அமுதமே உண்ணல்
பொருந்திய இல்வாழ்விற்கு என்றும் இன்னலே



தினமும் விருந்தினரை உபசரிப்பான் வாழ்வில்
மனம் உவந்து வந்தே வறுமை அனுசரிக்காது

முகமலர்ந்து விருந்தளிப்பான் இல்லம் தன்னிலே
அகமலர்ந்து திருமகள் தங்கி வசிப்பளே

விருந்தினர் மனமகிழ்ந்து உண்டபின் மீதத்தை உண்பவன் மனையில்
வித்து இடாமல் முளைக்கும் பயிர்களே

வந்தாரை விருந்தோம்பச் செய்து வருவோரை எதிர்நோக்கிக் காத்திருப்பனை
வந்தனம் சொல்லி வரவேற்கக் காத்திருக்கும் தேவருலகே

விருந்தினரை உபசரித்தலின் பலனை அளவிட அளவுகோலில்லை
வரும் விருந்தினரின் தகுதிக்கேற்ப அளவு மிகுமே

விருந்து உபசரிக்கத் தவறி மறந்தோரே
வருந்தியே பொருளைப் பாதுகாத்தும் பயன் துறந்தோரே

பொருளிருந்தும் விருந்து உபசரியான் வறுமையாளனே
இருள்சூழ்ந்த அறியாமைக்கு உரிமையாளனே

அனிச்சமலர் மென்மை தன்மையால் முகந்தாலே வாடிடுமே
பனிமலராய் தன்மை கொண்ட விருந்தினரை முகந்திரிந்து நோக்கின் ஓடிடுவர்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

மாலையின் மௌன மூச்சில்
மெழுகுவர்த்தி மெதுவாய் தழல்கிறது
அதின் பொன்னொளி சொல்லாத கதைகள்
தைரியமாய் துடிக்கும் இதயத்தின் மொழிகள்

செர்ரி கனவுகள் மெல்ல பறக்க
சிரிப்பின் இனிமை போல துளிர்க்கும்
வானில் சிவந்த நட்சத்திரங்கள் போல்
அவை அமைதியின் புண்களை
நனையச் செய்கின்றன



வெளி உலகம் உறங்கும் நேரத்தில்
காதல் காற்றில் பாடலாக எழுதுகிறது
ஒவ்வொரு மூச்சும் ஓர் ஆசை வரி
காலத்தின் மடியில் தொலைந்த கவிதை

மெழுகுவர்த்தி ஒளியும் செர்ரி நிறமும்
இரவின் இருளை கலப்பதாய் பிரகாசம்
ஒவ்வொரு கனவும் ஒளி பிறக்கும் விதை
அது — செர்ரி கனவின் மாய ஒளி

கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

# என்னதான் செய்ய?



வருத்தம்தான்
என்ன செய்ய?
கண்ணுக்குள் வைத்து
பார்த்து கொண்ட பின்
கண் இமைத்தூசியென
அவர்கள் கடந்து சென்றதை
நினைக்கையில்
வருத்தம்தான்

இளைப்பாறிட
மர நிழல் தேடியவர்களுக்கு
மனை தந்துதவியவர்களை
வருத்தமாயினும்
கடந்து செல்ல முடியாதல்லவா.

யாரும் பாரா விதம்
திறக்காதளவு பெட்டகமொன்றிலேனும்
போட்டு பூட்டிக்கொள்ளலாமில்லயா?

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# புன்னகை

இதழ்கள் அணிந்திடும்
இனிய ஆபரணம்
இறவாத நேர்மறை
எண்ணங்கள் வளர்த்திடும்

தசைகளைத் தளர்த்தும்
தணிவான நிலைவரும்
தெம்பை வளர்த்து
துன்பம் துடைக்கும்

மிருகங்களுக்கும் நமக்கும்
மிகப்பெரும் வித்தியாசம்
மிருதுவாகிறது உலகம்
மின்னிடும் புன்னகையில்!




கவிஞர் மரூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அவர்வயின் விதும்பல்

## அதிகாரம் : 127

சுவற்றிலெழுதிய நாட்குறிப்பை
தொட்டுத்தொட்டு விரலும்.
தூரத்திலுன்னை பார்த்துப்பார்த்து
கண்களும் செத்துப்போனதடா.

உன்னை மறந்தால்
என்னழகு குன்றுமடா.
கைவளையல் கழலுமடா
என்னாளும் மறவேனடா.



வெற்றிதேடிச் சென்றவனே
வெற்றியோடு திரும்படா.
வரும்வரை வெற்றுயிரை
விட்டுவிடாது காத்திருப்பேனடா.

கூடிக்களித்த இன்பம்மறந்து
ஓடியநின் வரவெண்ணி.
தடிமரக்கிளையேறி பார்க்கிறதே
அறிவிலா என்நெஞ்சமடா.

காதலனே உன்னை
கண்நிறைய கண்டபின்னே.
என்தோளின் பசலைநோய்
கண்காணாது நீங்குமடா.

காதலனே என்றேனும்
ஒருநாள் வருவாயடா.
என்துயர் தீரும்வரை
உன்னிலின்பம் காண்பேனடா.



கண்ணெதிரே நீவந்தால்
காமத்தால் ஊடுவேனோ.
கட்டித்தழுவி கலப்பேனோ
நானென்செய்வேன் அறியேனடா.


அரசனவன் போர்வெல்லட்டும்
அன்பே நாம்விரைந்து.
மனைகூடி மடலேறும்
விருந்தை உண்போமடா.

தூரதேசஞ்சென்ற உன்
வரவெண்ணி வருந்தும்.
பெருங்காதலின் பெண்ணெனக்கு
ஒருநாள் ஏழுநாளாகுதடா.

பிரிவால் மனமுடைந்து
இம்மண்விட்டு மாண்டபின்.
எனைத்தேடி நீயும்தான்
வந்தென்ன பயனடா.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

துரத்திப் பிடிக்கும் தூரத்தில்
தேன் கூடாய்
தொங்கிக் கொண்டிருக்கிறது
கனவு.
தொட்டு விடும் தூரத்தின்
அடிவானமாய்
தினவும் தொந்தரவுகளுடன்
துரத்திக் கொண்டிருக்கிறதை
இரசிக்கிறது வாழ்க்கை.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை



கண்ணீர் துளிகள்
உலகத்தின் மிகப்பெரிய
ஆயுதமாய்

பிடிவாதத்தின் முழுமையான
அடையாளம் கண்ணீரின்
கதைகளாய்

ஒருசில பெண்மையின்
கண்ணீர் அலமாரியில்
புடவை நகைகளின் சேமிப்பாய்

போர்களின் இடிபாடுகளில்
சிந்திய கண்ணீர் நாளைய
பொழுதுகளின் வேதனைகளாய்

ஏழ்மையின் கண்ணீர் ஏக்கங்களின்
தொடர் கதைகளாய் தேவைகளின்
தேடல்களாய்

கண்களுக்கு மட்டுமே சொந்தமான
கண்ணீரோ பலருக்கும்
பல்வேறு கதைகளின் முகவரிகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அம்மனின் சிறப்புகள்

அம்மன் விஸ்வரூபம் சக்தி கொண்டவள்
அம்மனின் திருநாமத்தை உச்சரிக்கும் போது
மனதில் தீய எண்ணங்கள் அழியும்
அம்மன் படைப்பவள் சக்தி;காப்பவள் சக்தி;
அழிப்பவள் சக்தி அபயம் என்று
அவளை சரண் புகுந்தால் போதும்.
அம்மனை தேவர்கள் வணங்கும் தேவியானவள்.
சிவனின் சரிபாதியாக அர்த்தநாரீஸ்வரர் உடலில்
அர்த்தநாரி அம்மனாக தேவியாக வீற்றிருக்கிறாள்.



உலக மக்களை காத்து வருபவள்.
சிந்தையில் நிறைந்து இருப்பவள்.
சிதறிய எண்ணங்களை ஒன்றாக சேர்ப்பவள்.
உலகநாயகி சக்தியாக வீற்றிருக்கிறாள்
அம்மனை இராகு காலத்தில் பக்தியுடன்
மனதார வேண்டினால் சங்கடங்கள்
தீர்ந்து நினைத்த காரியம் கைகூடும்.
சக்தி மஞ்சள் அலங்காரத்தில் மகிமை கொண்டவள்.

"அம்மனின் துதி பாடல் அபிராமி அந்தாதி,
சகலகலாவல்லி மாலை, லலிதா சகஸ்ரநாமம்,
சகல ஐஸ்வரியங்களும் தரும்
காயத்ரி தேவி மூன்று வேளைகளிலும்
முப்பெரும் தேவியாக வீற்றிருக்கிறாள்.

அம்மனை பார்த்து பக்தியுடன் வணங்கும் போது
இப்பிறவி போதாது.
ஆனந்தத்தில் பேரானந்தம் அம்மனின் காலடியில்
சரணடைவது.

கவிஞர் மா. நந்தினி, சேலம்

தனிமையான நிமிடங்கள்
ஒவ்வொன்றும்
இனிமையான பொழுதுகள்தான்
பல நிஜங்கள் நினைவுகளாக
என்றும் என்னுடன்.



தனிமையை நான்
நேசிக்கின்றேன்
பல நினைவுகளை
அதில் சேமிக்கின்றேன்.

நீ அருகில் இல்லை என்றாலும்
வார்த்தைகள் நினைவுகளாக
இன்று என்னுடன் என் உயிர் உள்ளவரை.

நிஜங்கள் நினைவுகளாக இன்று
என்னை சந்தோஷப்படுத்தி
தனிமை தேடுகிறேன்.

உன்னை என்னிடத்தில்
பிரித்தாலும் பிரிக்க முடியா
நினைவுகள் நிஜங்களாக
இனிமை தரும் தனிமையே

நன்றி இறைவா
மாற்றதை புதிய பயணம்

கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், செங்கல்பட்டு மாவட்டம்

# உட்பகை அழிப்போம்

பாரதமென்னும் பழம்பெரும் நாட்டின் விடுதலைக்குப்
பண்டிதர்முதல் பாமரர் ஈறாக அனைவரும்
பாடுபட்டுக் குறுதியைக்கொட்டி விடுதலைப்பெற்றோம்;
பரங்கியர்கள் பாரதத்தை விட்டோடும் முன்னர்
பாகமிரண்டாய்ப் பாரதத்தைப்பிரித் தேபோயினர்நம் மைப்பாழாக்க;
பலவீனப்படுத்த; பாரினில் நாம்வல்லரசாய் வளராதிருக்க!

தமக்கென மதத்தின் பெயராலொரு நாடுபெற்றதுவே
தமக்குத்தாய் நாடென்று பாரதம் நீங்கியோர்
கிடைத்ததைக் கொண்டு மகிழாது கிடைக்காத
காஷ்மீரை எப்படியேனும் பெற்றிடவே ஆடுகின்றார்
பேயாட்டமது தீவிரவாதமென நாமுரைக்க தீவிரவாதிகளோ
பல்லிளித்து சொல்கின்றார் விடுதலைப் போராட்டமென!



குண்டுகளை வெடிப்பதும் கொலைகள் செய்வதும்
குவலயத்தில் தம்மதம் தமக்குத் தந்த
குற்றமற்ற கடமையென கருதுவதோடு தம்கருத்தொத்த
கூட்டத்தைப் பெருக்குகின்றார் பற்பல வழியிலதில்
கூடப்பிறந்த இந்திய உறவுகளும் தடம்மாறி
கூவித்திரிகின் றனர்பாரதத்தின் நிம்மதியை அழிக்க!

காஷ்மீரைச் சுற்றிப் பார்க்கத்தத்தம் கணவரோடு சென்ற
கயல்விழி மங்கையர் குங்குமம் அழித்த
கோழைகளுக்குப் புகழிடம் தந்தோர் வாழ்விடங்களை
குண்டும்குழியு மாக்கியநம்மீ தானக்கோபத் தால்புதுதில்லியைக்
கார்க்குண்டு மூலம் தகர்க்க பார்த்து
கடவுளாய்ப் போற்றப்பட வேண்டிய மருத்துவன்
காலனாய் மாறி உட்பகையானது கண்டோம்!

நாடொன்றுநல் நாடாயிருக்க நானிலம் போற்றும்செந்
நாப்புலவர்வள் ளுவனாருட்பகை யொழிக்கக்கூறின ரொருகுறளில்!
எத்திக்கில் உட்பகை எவ்வுருவில் இருந்தாலும்
அத்தனை உட்பகையையும் கண்டறிந்து கொன்றழிக்க
இத்தரணிமேல் எழுகயெழுகவிந் தியப்பற்றாளர் ஓர்படையாய்!

திருக்குறள்.
பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லத நாடு.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

பேசிப் பயன் என்ன?
அள்ள அள்ள குறையாமல்
தரும் அமுதசுரபியோ
அடகுக் கடையில்
மீட்டு தர வேண்டிய ஆபுத்திரன்களோ
மதுக்கடையில் மக்களின்
அன்றாட வாழ்வோ வறுமை என்னும்
சாக்கடையில் விலை போகாமல்
வீழ்ச்சியடைந்து கிடக்கிறது
நேர்மை எனும்
வாசம் சமுதாய பூக்கடையில்
ஓயாமல் உழைப்பவன் ஒண்டுகிறான்
ஓட்டைக்குடிசை வீட்டில் உழையாமல்
பிறர் உழைப்பை
அட்டையாய் உறிஞ்சுபவன் வாழ்வது
உயர்ந்த வீட்டில்
ஏற்றதாழ்வு இல்லாத சமம் என்ற
எண்ணம் வாழ்கிறது
சுடுகாட்டில் வழிப்பறி செய்யப்பட்டு
வலியோடு துடித்து நிற்கிறது வாய்மை.
வழிப்பறி செய்துவிட்டு வஞ்சகம் புன்னகை
சுமந்தபடி வையகத்தில்
வலம் வரும் பொய்மை.
சட்டங்களை யாரும்
செய்யவில்லை சட்டை. எடுப்போம்
பாரதியின் கவிதைச் சாட்டை
சமத்துவ பாட்டை எழுத இனி
பேசிப் பயன் என்ன?



கவிஞர் முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

போகாதே என சொல்ல — உரிமை இருக்கு,
போய் வா என சொல்ல — அறிவும் இருக்கு.
போகாதே என சொல்ல — ஆசையிருக்கு,
போய் வா என சொல்ல — பொறுப்பிருக்கு.
போகாதே என சொல்ல — காதலிருக்கு,
போய் வா என சொல்ல — புத்தியிருக்கு.
போகாதே என சொல்ல — காரணம் இருக்கு,
போய் வா என சொல்ல — காரியம் இருக்கு.
போகாதே என சொல்ல — வாய்ப்பிருக்கு,
போய் வா என சொல்ல — வார்த்தை இருக்கு.
போகாதே என சொல்ல — நேரமிருக்கு,
போய் வா என சொல்ல — நேசமிருக்கு.
போகாதே என சொல்ல — மனமும் இருக்கு,
போய் வா என சொல்ல — மனசாட்சியும் இருக்கு.



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# கல்வியே துணை

பாரினிலே அவதரித்தமைக்கு
பல கோடி அர்த்தம் தருவது
கற்ற கல்வியே
ஒவ்வொரு கனவும் நிஜமாக்க
கல்வியே என்றும் துணை தருமே.

வாழ்க்கையை வெறுத்து
தனிமையில் சென்றாலும்
எம் மனதோடு முயற்சியினை
சிறப்பாக தருவது கல்வியே.

கண்ணீர் துளிகளை
அன்புடன் தாங்குவதும்
நம்பிக்கை ஊற்றை
வளர்ப்பதும் கற்ற கல்வியே.

யோசிக்கவும்,நேசிக்கவும், சுவாசிக்கவும்,
அறிவின்பால் முன்னேறவும்
மானிட வாழ்வின் மாற்றம் தரவல்லது
கல்வியே கல்வியே.

அணையா அகல் விளக்கு,
அறியாமையின் விடை,
அமைதியின் உறைவிடம்,
சாதிக்க நல்ல துணை தரும்
சொத்து கல்வியே.

மாற்றங்களால் மாற்றம்
பெற கல்வியை
நமக்கு துணையாகுமே.



கவிஞர் ஏ. எம். முருஷீதா பேகம், அக்குறணை (இலங்கை)

மேகங்கள் இறங்கும்
மலையின் முகடு
பச்சை நிறத்தில்
படர்ந்திடும் மரங்கள்!

மேகத்தைப் பிளந்து
எட்டிப்பார்க்கும் மாலை நேர
சூரியன்!

பின்னுக்கு விரைந்தோடும்
சாலையில் அவசரமாய் விரையும்
ஊர்திகள்!

விரல் நகங்களில்
மூக்கின் நுனியில்
சில்லிடும் குளிர்!

புகைவண்டியின்
குளிர்சாதனப் பெட்டியின்
ஜன்னல் வழியே

உலகம்தான் எத்தனை
அழகு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

நம் வீட்டை பாதுகாக்கும்
பூட்டிற்கு கூட
ஈரக்கம் உண்டு போலும்,
தன்னில் வளரும்
கள்ளிச்செடியை
பாதுகாக்கிறதே,

நம் மனதில் வாசிக்கும்
உறவுகளுக்கு மட்டும்
ஈரக்கமில்லை போலும்.
நற்செடியை கூட
பாதுகாக்க மாறுகிறதே.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# கடற்கரைத் தென்றல்



உயிர் இல்லை உருவம் இல்லை
இயற்கையது உயிர் கொடுக்க

ஊடலின்றி கூடல் கொள்ளும்
இசையற்ற கானம்

மனதோர காயங்கள்
மர்மமாய் மாய்ந்து போகும்

கடலோர காற்றின்
உணர்வலைகள் தீண்டுகையில்

மோகமது கொள்ளவில்லை
முத்தம் தன்னை கொடுக்கவில்லை

சாதி மதம் பார்க்கவில்லை
சம்பிரதாயம் எதுவும் இல்லை

சாகா வரம் பெற்று சர்வமும்
நானென கர்வம் அது கொள்ளவில்லை

உயிர் உருவம் இல்லாமல்
பலர் முகத்தில் புன்னகைக்கும்

தென்றல் என பெயர் கொண்ட
கடலோர கவிதை அவள்

யார் தடுத்து ஓயாது
நொடிக்கொரு முறை மாறாது

கடலோரம் சென்றாலே
மனிதத்தை மறக்க வைத்து

மனதுக்குள் ஆயிரம் புரட்சி செய்யும்
அபூர்வத் தென்றல்

கவிஞர் சுஜிரேக்கா சுதாகரன், திருகோணமலை (இலங்கை)

முன்னூறு நாட்கள் சுமந்து
மூச்சடக்கி என்னை ஈன்றவள்
இரவு பகல் பாராமல்
பசி தூக்கம் மறந்து
பாராட்டி சீராட்டி வளர்த்தவள்
என்னை மேடையில் ஏற்றிஅழகு பார்த்திட
அயராது பாடுபட்டவள்
எத்தனை குறைகள் என்னுள் இருப்பினும்
நிறைகளை மட்டுமே பார்த்து ரசிப்பவள்
எத்தனையோ பேர் எவ்வளவோ
குறை கூறினும் அத்தனையும் முறியடிப்பவள்
புத்தாடைகள் பல வாங்கி தந்தவள்
புத்தம் புதிதாய் பல கதைகள் சொன்னவள்
பக்கம் பக்கமாய் சொல்லி இருப்பாள்
என்னை வளர்க்க எத்தனை பாடுபட்டாள் என்று!
அத்தனையும் வெறும் கதைகளாகவே தெரிந்த எனக்கு,
பிறகு தான் புரிந்தது
அவள் கூறிய தாய்மையின் உன்னதம்
"நானும் ஓர் தாயான பின்பு"



கவிஞர் ரா. கௌசல்யா, சேலம்

விடிந்தால் சூரியன்
மறைந்தால் நிலவு
இதற்கு இடையில்
படும் துன்பங்களை
சொல்ல வார்த்தை இல்லை
அனுதினமும் போராட்டம்
வயிற்று பசியை போக்கவே
இந்த இக்கட்டான நிலை
மழை, வெயில்
பாராமல் உழைத்து
ஒவ்வொரு நாளினையும்
கடக்கின்றன
துயரம் நீங்கி
இன்பம் என்னும்
மலரை காண.



கவிஞர் மோனீஷா

தனிமை என்னும் பெரும் மருந்து
நம்மை பக்குவப்படுத்தும் மாமருந்து
கற்பனையில் மிதந்து காலம் கடத்தாமல்
நிம்மதியான செயல்களால்
அமைதி கொள்வோமே

உள்ளத்தில் வலிமையும்
மனதில் அமைதியும் நிலைத்திட
தனிமையும் மருந்துதானே



கடந்து போன கசப்புகளை புறந்தள்ளி
நிகழ்கால செயல்களுக்கு தயாராவதும்
மனம் விட்டு சிரித்து கவலை என்னும்
பெரும் நோயை காணாமல் செய்வோம்

இனிய பேச்சும் மாறா புன்னகையும்
இதயம் சிறக்க வாழ்வதும்
போதும் என்ற மனமும் எளிமையின் வழியே
ஏற்றம் காண்பதும்
இனிய நிலையின் இன்ப வழியே

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# இளவேனிற் காலம்!

பருவகாலங்களை அறுவகையாய் பிரித்தனர் தமிழர்கள்!
சித்திரை வைகாசி மாதங்கள் இளவேனில்!
முதுவேனிற் காலமாக ஆனியும் ஆடியும்!
கார்கால வகைப்பாட்டில் ஆவணி, புரட்டாசி!
அடைமழை ஐப்பசி, கார்த்திகை குளிர்காலம்!
முன்பனிக் காலமென மார்கழி,தைமாதம்!
பின்பனிக் காலமென, மாசியும்,பங்குனியும்!
ஆங்கில மாதங்கள் மார்ச் முதல் மேவரை
இளவேனிற் காலங்கள்!வெப்பம் உயரும்!
ஆறுகளில் நீர்குறையும்! இலைகள் உதிர்வதால்
மரங்களின் நிழல் குறையும்! நீர்தேடி
பறவைகள் அலைந்திடும்! ! வெப்பத்தால் உயிர்வாடும்!
சங்கப் பாடல்களில் நெய்தல் நிலம்வாடி
நின்றது காற்று என்றொரு காட்சியுண்டு!
இளவேனிற் காலத்தில் இயற்கை வாடுவது
தலைவனைப் பிரிந்த தலைவி அந்நாளில்
உளம்வாடி நின்றதற்கு ஒப்பீடாய் அகத்திணையில்!
நெஞ்சின் சூடு வெயிலின் தீயாய்!
வெயிலின் வெப்பம் தாங்கா நிலம்போல
பிரிவின் வேதனை தாங்கேன் என்மனமே
என்றொரு பாடல் நற்றிணையில் உண்டு!
வறட்சியிலும் வலிமையுடன் வீரர்கள் தளராது
போராடும் காட்சிகளை புறநானூறு உரைக்கிறதே!
நிலமும் வானமும் பிரிவை உணர்ந்திடுமே!
பிரிவு ஏக்கம், வாடலை சித்தரிக்க இளவேனில்
வறட்சியை ஒப்பீடாய்க் காட்டின இலக்கியங்கள்!
இயற்கையும், மனிதர்களின் உணர்ச்சியும் இணைந்த
இளவேனில் அழகான தமிழ்மரபின் வெளிப்பாடாய்!
இளவேனில் முழுநிலவு எப்போதும் அழகன்றோ?



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கூழாங்கற்கள்

துள்ளி வரும் துளிகளோடு
உருண்டோடும் கற்கள்
வெண்மை பூசிக்கொண்டு
பல வடிவத்தில்

பார்வைக்குள் ஆழப்பதிந்து
அழைக்கும் அழகில்
பெயர்த்த விரல்களில் நழுவி
உருண்டது

வற்றிய குட்டையில் வாகாய்
அமர்ந்த கால்களில்
நறுக்கென்ற முத்தம் தந்த
கூழாங்கற்களே

நீருக்குள் முக்குளிக்க
காத்திருந்ததோ
நீரின் சுவைத் தீரும்வரை
தீர்த்தவாரியில் குழையுமோ

கூழாக குழைவதில்லை
குத்தீட்டியின் வீரம் போல்
கூழாங் கற்களின் கவிதை



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டணம்)

பள்ளிக்கு விடுமுறை.
ஆனாலும் அனைவரும்
தவறாமல் போவோம்;
ஒருத்தர் விடாமல்.
மூவர்ண ரிப்பன்
பின்னலில் கட்டி,
வெள்ளை பாவாடை,
வெள்ளை சட்டையில்,
ஆடிப் பாடுவோம்;
ஆட்டம்,பாட்டம்
கொண்டாட்டம், கரை
புரண்டு ஓடும்.



விளையாட்டு டீச்சர்
நேருவின் வேடத்தில்;
களிப்புடன் தரும்
ஆரஞ்சு மிட்டாய்;
தித்தித்து இருக்கிறது;
இன்றும் நெஞ்சில்.
இனிக்கும்ஆரஞ்சு மிட்டாய் இன்று
தித்தித்து இருக்கிறதா; என்ன?

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மழலைகளின் உலகம்

மழலைகள் மகிழ்ந்தால் மனது நிறையுமே
குழந்தைப் பேச்சிலே குவலயம் நிறைக்குமே
தொடரும் திறமைகள் தொகுப்பில் வளர்ந்து
படரும் நட்பில் பெருக்கும் பண்பே

வளரும் கலையின் வசந்த சிறப்பில்
தளரா உறவாய் தரத்தில் நிறைக்குமே
மகிழ்ந்து வாழும் மகத்துவ பிறப்பில்
புகழ்ந்து பேசிடும் புரிந்துணர்வு புகழே

வளரும் கலையின் வசந்த சிறப்பில்
தளரா உறவாய் தரத்தில் நிறைக்குமே
மகிழ்ந்து வாழும் மகத்துவ பிறப்பில்
புகழ்ந்து பேசிடும் புரிந்துணர்வு புகழே

திறமாய் வாழ்வில் திண்மை ஒளியாய்
கற்று தினமும் கடமையில் உயர்வாய்
எடுத்த செயலை எளிதில் முடித்து
கொடுத்த பாடமாய் கொள்கையில் உயர்வாயே

விழுதாய் காப்பாய் விருந்தான பெற்றோரை
செழுமையாய் வாழ்ந்து செழிப்பில் நிலைப்பாயே
கிடைத்திடும் வாய்ப்பை கிளர்ச்சியாய் பெருக்கி
உடைத்து எறிவாய் உன்னத நட்பாலே

எதிர்காலம் சிறக்க என்றுமே உழைத்து
கதிராய் வாழ்வைக் கருத்தில் கொள்வாயே
சிந்தனை முழுதும் சிறப்பாய் உயர
வந்தனை செய்வாய் வாழ்த்திடும் பெற்றோரை

சுகமாய் கொடுத்த சுற்றமான நண்பர்களும்
இகத்தில் கிடைக்காத இன்னுயிர் நலமே
வகுப்பறைப் பாடமும் வந்திடாத சொந்தமே
தொகுக்கும் வாழ்வின் தொடர்பின் உரமே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

கண்ணாடி
நோக்கி
திரும்பும்
பிம்பங்களின்
கேள்விக்குறிகள்
புன்னகை
வளைவாக
மாறும் போது மட்டுமே
உடைந்து விடாத
ஒரு நாளை
கண்ணாடியால்
பரிசளிக்க முடியும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

மழலையின் உள்ளம் மகிழ்ச்சி நிறைந்த உலகம்
எல்லையற்ற இன்பத்தை அள்ளித் தரும்
முல்லை மலர்கள் மழலையின் உலகம்
சாதி மதச் சண்டைகள் வஞ்சகம்
சூது போட்டிப் பொறாமை வீணான ஆசைகள்
தேவையற்ற கவலைகள் ஏக்கங்கள்
கண்ணீர்கள் இல்லா உலகம்



களிமண் பிசைந்து கூட்டாஞ்சோறு சமைத்து
பூவரசு இலையை வைத்து விளையாடும்
உலகம் மழலையின் உலகம்
அழகாய் எண்ணை வைத்து தலைச்சீவாது
நெத்திப் புருவத்தை சரிசெய்யாது
உதட்டில் சிவப்பு சாயம் பூசாது
முகத்தில் வாசனை பவுடர் போடாது
கழுத்திலும் உடலிலும் தங்க ஆபரணங்கள் சூட்டாது

வண்ண வண்ண ஆடைகளை அணியது
ஆனால் அழகு உலகில் பேரழகு!
அதிகாலை பூக்கும் மலர்களை விட
மழலையின் சிரிப்பு அழகு
துள்ளித் திரியும் பட்டாம்பூச்சிகளின் அழகு
நெஞ்சத்தை கொள்ள அடிக்கும் அழகு
மயில்களின் ஆட்டம் இன்ப நீரோட்டம்
குயில்களின் பாட்டு மனதைக் தொடும் தாலாட்டு
மொத்தத்தில் மழலையின் உலகம் மருத்துவ உலகம்

பெரியோர்களை மகிழவைக்கும் பூந்தோட்டம்
குணமளிக்கும் மருத்துவமனை மழலையின் உலகம்!

கவிஞர் அ. இராபர்ட் கென்னடி, வேளாங்கண்ணி

# அது அந்த காலம்



அது அந்த காலம்
எவரும் போட்டி போட்டு ஆடாத காலம்
சேர்ந்திருந்து கூட்டாஞ் சோறு சமைத்து
சாப்பிட்டு ருசித்த காலம்!
ஆணும் பெண்ணும் சேர்ந்து
கதை பேசிய வசந்த காலம்!
கிராமிய விளையாட்டு விளையாடி
மகிழ்ந்த பொழுதுகள்!
நெஞ்சில் நின்று
இனிய கானம் முணு முணுக்கும் காலம்!
நேரில் பார்த்து
உடலோடு பேசிடும் காலம்!

இன்றைய தலைமுறைக்கு
இது புரியாத காலம்
உணவிலும் உடையிலும்
பொறுமையிலும் பொறுப்பிலும்
உறவிலும் உண்மையிலும்
பாசத்திலும் பக்குவத்திலும்
இன்றைய தலைமுறைக்கு
இது புரியாத காலம்!

பழஞ் சோறு சாப்பிட்டு பள்ளிக்கு போனதும்
ஒலி பெருக்கியில் பாட்டுக்கு பாடல் கேட்டதும்
குத்தரிசிச் சோறும்
கணயான் குழம்பு சாப்பிட்டு
உறைத்ததும் சீனி அள்ளி
வாயில்போடுவதும் அந்தக் காலம்!

காலுக்கு வேலை
கடதாசிக்கு சேவை
சேற்றுப் புழு மழைகாலம்
சொறிவதால் புண்
கடதாசி எண்ணெய் வந்து
மருத்துவனாக சுகம் கொடுப்பான்!

எல்லாம் தொலைத்தோம்
தேடியும் கிடைக்காத
அன்பு + பாசம் தொலைத்தோம்
உறவுகளை உண்மையோடு
தேடுகிறோம்
மங்கலாய் தெரியும்
மனரம்மியமான காலம்
அது அந்தக் காலம்

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

**பள்ளிக் காலத்து**
**புத்தாண்டு நினைவலைகள்**

புதுவருடத்தின் முதல்நாளில்

தினம் ஆலயத்திற்கு
விரும்புவது கிடைக்க

தினமும் நாட்குறிப்பு
நிகழ்வுகளை பதிய

தினமும் படித்தல்
அதிக மதிப்பெண்கள் பெற

தினமும் அனுசரித்தல்
நண்பர்களிடத்தில்
சண்டை வராமல் இருக்க

தினமும் சொன்னபடி கேட்டல்
ரத்த உறவுகளிடத்து வசைமொழி
கிடைக்காமல் இருக்க

தினமும் மாலை விளையாட்டு
சந்தோஷமாக
இப்படியாய் தீர்மானம்

ஆனால்
யதார்த்ததில் ஆண்டின்
முழுவதும் இல்லை
ஆண்டு தொடங்கி
சிலநாட்கள் கூட
இது எந்த ஆண்டிலும்
நடந்ததில்லை

*****



**சில வார்த்தைகளில்**

நான் இருக்கிறேன்
கவலைப்படாதே

கொஞ்ச காலத்தில்
கஷ்டங்கள் சரியாகிவிடும்

உன் மனதுக்கு
நல்லதே நடக்கும்

இறைவன் நிச்சயம்
உன் அருகில் இருப்பார்

இவை எல்லாம்
ஆறுதல் வார்த்தைகள்
மட்டுமில்லை

நம்மீது நாமே அன்புகொள்ள
திறமை மீது பற்றுகொள்ள
சொல்லப்படும்
நம்பிக்கை வார்த்தைகள்

இதைஎல்லாம் சொல்வதற்கு
சம்பந்தபட்ட விஷயத்தில்
நிபுணத்துவமோ அனுபவமோ
கட்டாயம் இருக்கவேண்டிய
அவசியம் இல்லை

சொல்பவருக்கு
நம்மைபற்றிய
உள்ளார்ந்த அக்கறை
இருந்தாலே போதும்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# பிரபுவின் சந்தேகக் கண்கள்....

## அத்தியாயம் -5 (நவீனம்)

அவர்கள் இருவரும் வழியில் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. நரேன், " வலது.... இடது..." என்று கண்ணனுக்கு வழி சொல்லிக்கொண்டிருந்தான்.

வசந்த், 'கொஞ்சம் அடக்கியே வாசிக்கலாம்' என்ற எண்ணத்தில் அமைதியாக இருந்தான்.

திடீரென்று பிரபுவிடமிருந்து அழைப்பு வர, " அலை பேசியில் கொஞ்சம் தொடர்பு பிர்ச்சினையாக இருக்கிறது. சார். நானே உங்களை அழைக்கிறேன்" என்று தொடர்பைத் துண்டித்து விட்டு, வசந்தைப் பார்த்தான்.

"என்ன விசயம்"? என்று சைகையால் கேட்டான் வசந்த்.

"கண்ணன். தண்ணீர் கொண்டு வந்திருந்தீர்களே, கொஞ்சம் தண்ணீர்பாட்டிலைக் கொடுங்கள்" என்றான்.

கண்ணன் தண்ணீர் பாட்டிலை எடுத்துக்கொடுக்க,கண்ணனிடமிருந்து தண்ணீர் வாங்கிக் கொண்ட நரேன், " கொஞ்சம் வண்டிய பக்கத்திலே நிறுத்துங்களேன்" என்றான்

"என்ன சார். இடம் வந்துடிச்சா" ? என்று கேட்டான்.

"இல்லப்பா, பிரபு சார் கிட்டே கொஞ்சம் பேசணும். சரியா தொடர்பு கிடைக்கமாட்டேங்கிறது."

"சரி சார்" என்ற கண்ணன் வண்டியை அருகில், ஒரு மரத்தடியில் நிழலில் நிறுத்தினான்.

வசந்த் "வா ஒரு புகை போடலாம். சிகரெட் வச்சிருக்கேயில்லையா?" என்றான் நரேன்.

"சார். நான் கொண்டு வந்திருக்கிறேன். தரட்டுமா?" என்று மேல் பையில் கைவிட்டான் கண்ணன்.

"இல்லேப்பா எங்ககிட்டே இருக்கு" என்று வசந்த் சொல்ல இருவரும் வண்டியிலேயிருந்து கீழே இறங்கினர்.

கொஞ்சம் தள்ளி வந்து நின்று " வசந்த், வண்டியிலே, நாம் எங்கே போகிறோம் என்பதைக் கவனிக்க, தனிக் கருவி (ட்ராக்கிங் சிப்ஸ்) மாட்டியிருக்கிறது.

கவிஞர் இரஜகை நிலவன்

நாம் எங்கே போகிறோம் என்பதைக் கவனிப்பதற்கு அவர் கண்ணன் கிட்டேயும் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்." என்றான். தாங்கள் பேசுவதைக் கண்ணன் கவனிக்கிறானா என்று அவன் நின்ற இடத்தைப் பார்த்துக் கொண்டே கண்ணன் தன்னுடைய அலைபேசியில் பேசிக்கொண்டே அவர்கள் நின்றதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இதென்னடா , புதுசா ஒரு பிரச்சினை?' வசந்த் நீளமாக மூச்சு விட்டான்

" நான் இதெல்லாம் முந்தியே எதிர் பார்த்தது தான். ஆனா .. நம்ம மேல இவ்வளவு சீக்கிரமா சந்தேகப்படுவார் என்று எதிர் பார்க்கவில்லை. சரி, இனி என்ன செய்ய வேண்டுமென்பது தான் முக்கியம்"

"ஆங்... அப்புறம் இன்னொரு விசயம். எக்காரணம் கொண்டும் கண்ணன் இருக்கிற நேரத்திலே எதுவுமே பேசாதே, என்ன?" என்றான் நரேன்

"சரிப்பா, இனி என்ன செய்யலாம் என்று உத்தேசம்?" என்று கேட்டான் வசந்த்.

"ரொம்ப எளிமையான காரியங்கள் தான். ஏன் வீணாக இடியாப்பச்சிக்கலாக முடிகிறது என்று புரியவில்லை. சே!. போனோமா? செடியைப் பறித்துக் கொடுத்தோமா, அந்த வெளி நாட்டுக்கார அமைப்பிற்கு நாலு கோடிக்கு விற்றோமா, ஆளுக்கொரு கோடியாக பிரித்துக் கொண்டு போனோமா என்று இல்லாமல் இன்னமும் ஏன் ஓடிக்கொண்டிருக்கிறோம்.

வா வசந்த்! இன்னும் ஒரு பிரச்சினையும் தொடங்கவில்லை என்றே வைத்துக் கொண்டே காரியங்களை வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாக செய்யலாம். ஒன்று மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். இனி நாம் நல்ல தேர்ந்த நடிகர்களாக நடிக்க ஆரம்பிக்க வேண்டும். நாம் நேராக அந்த சித்தர் கல்லறைக்குப் போக வேண்டாம். நாம் கண்ணன் காரில் போய் ஒரு கிலோ மீட்டருக்கு அந்தப்பக்கம் தங்குவோம். அங்கிருந்து மெதுவாக கண்ணனைக் கழற்றி விட்டு விட்டு.. மெதுவாக அங்கிருந்து அந்தச் சித்தரைப் புதைத்த இடத்தை தேடிப் போகலாம்" என்றான் நரேன்

## பிரபுவின் சந்தேகக் கண்கள்.... அத்தியாயம் -5 (நவீனம்)

"அது சரிதான் நரேன், ஆமாம் நாம் எப்படி கண்ணனைக் கழற்றி விடப்போகிறோம்?. ஏற்கனெவே பிரபு எப்படியும் நம்மை விட்டு விலகாதவாறு இருக்கும்படி முன்னேற்பாடுகள் எல்லாம் செய்திருப்பாரே.. ம்..ம்... சரி, நாம் முதலில் எந்த இடத்திற்கு போகிறோம். அதை முடிவு பண்ணு. மற்றதெல்லாம் அப்புறம் பார்க்கலாம்." என்று கேட்டான் வசந்த்.
கொஞ்சம் வளர்ந்திருந்த தாடியை தடவிக்கொண்டு, " சரி நான் வேறு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்... கிளம்பு, அங்கே போய் விட்டு பின் மேலே யோசிக்கலாம்" என்றான் நரேன்.
"ஏம்பா, ஏங்கிட்டே கூட சொல்லக்கூடாதா?"
" வசந்த், உன்கிட்டே தான் சொல்லக்கூடாது!"
"ம்.க்கும்.. எப்பவுமே என்னை ஒதுக்கி வைக்கிறதிலே குறியாக இரு. ஆமா இன்றைக்கு ஒரு புறாவும், ஓ சொல்லி முடிப்பதற்குள்ஒரு புறா வந்து விட்டது பார்" என்றான் வசந்த்.
"எங்கே..? எங்கே?" ஆர்வமாகத்தேட ஆர்ம்பித்தான் நரேன்.
"நீ முதலிலே திட்டத்தைச் சொல்லு, அப்புறமாக புறாவைக்காட்டுகிறேன்"
வசந்த்.கிண்டல் பண்ணுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட நரேன், "சரி சரி வா போகலாம் என்றவாறு காரை நோக்கி நடந்தான்.
வசந்தும் பின்னால் வேகமாக நடந்து காரில் ஏறிக்கொண்டான்.
திரும்பவும் காருக்குள் ஒரு பேரமைதி நிலவ" வெண்ணிலா வானில் வரும் வேளையிலே..." என கண்ணன் வானொலியைத் திருப்ப சிரித்துக்கொண்டே," கண்ணன் செம மூடிலே இருக்கிறார் போல்இருக்கு. ஏதாவது முக்கியமான காரியங்கள் எதுவும் உண்டா?" கண்ணனின் வாயைக் கிளறினான் வசந்த்.
"அது ஒண்ணுமில்லை சார். இன்றைக்கு சாயங்காலம் பெண் பார்க்கப் போறோம்" என்றான் வெட்கப்பட்டுக் கொண்டே.

"அடேயப்பா... புது மாப்பிள்ளைக்கு நல்ல யோகமடா.. வெட்கத்தை பார் ஆமா பொண்ணு யாரு?" திரும்பவும் வச்ந்த் கேட்டான்.

கவிஞர் இராஜகை நிலவன்

# பிரபுவின் சந்தேகக் கண்கள்....

## அத்தியாயம் -5
(நவீனம்)

அத்தைப் பொண்ணு தான் சார்.ஏற்கனெவே தெரிஞ்சவ தான்.ஏதோ பூ வைக்கிற சடங்கு ஒண்ணு வைக்கிறாங்க.. அவ்வளவு தான்"
"அவ்வளவு தானா? " என்று நரேனிடம் கண்ணடித்து விட்டு,
"அப்போ இனி தான் போய் சேலை எல்லாம் எடுக்க வேண்டியதிருக்கும்" என்ற வசந்த், "உங்களுக்குச் சீக்கிரம் போக வேண்டியது அவசியமில்லையா... நரேன். நீ ஒண்ணு பண்ணு.. இங்கே இறங்கிக்கோ.. நான் போய் கண்ணனை வந்த நுழை வாயிலிலே கொண்டு போய் விட்டு விட்டு வந்து விடுகிறேன்" வசந்த் மனதிற்குள் சிரித்துக் கொண்டே.
நரேனும் புரிந்து கொண்டு, மேற்புருவங்களை உயர்த்திப்பார்த்துக் கொண்டே " சரி காரை நிறுத்துங்க... நான் இறங்கிக் கொள்கிறேன்" என்றான். " அட அதெல்லாம் ஒன்றும் அவசரமில்லே சார்" கண்ணன் கொஞ்சம் நெளிந்தான்.
"புது மாப்பிள்ளை பூ வைக்கிற நாளிலே., நாங்க, ஏன் சார் உங்களை பிந்தி அனுப்ப வேண்டும்?. நரேன். நீ இறங்கிக் கொள். நான் கண்ணனை நுழை வாயிலில் விட்டு விட்டு வருகிறேன்" என்றான் கண்ணனின் தோள்களை அமுக்கிப் பிடித்துக் கொண்டு.

கண்ணன் காரை நிறுத்த, நரேன் கீழே இறங்கிக்கொண்டான்.
" நீ இங்கேயே நில்லு. நான் கண்ணனை விட்டு விட்டு வந்து விடுகிறேன்" என்றான்.
"சார். பிரபு சாருக்குத்தெரிஞ்சா திட்டுவார்"
"நீ ஒண்ணுப்பா, அவருக்கு ஏன் நீ சீக்கிரம் போறது தெரியப்போவுது" என்றான் காரை லாவகமாக வளைத்து திருப்பிக் கொண்டே. அருகில் ஒரு பாலத்திற்கு அருகில் வந்த நரேன், நெய்லிக்கு போன் பண்ண ஆரம்பித்தான்.

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

**ஆரோக்கியம், அறிவு மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான அத்தியாவசிய மருந்து தூக்கம்**

மனித வாழ்க்கையில் நாம் தவிர்க்க முடியாததும், தானாக விடுபட இயலாததுமான அடிப்படைச் செயல்பாடுகளில் ஒன்றுதான் தூக்கம். எனினும், இன்றைய நவீன காலகட்டத்தில், நமது வாழ்க்கை முறை மாற்றங்களால் தூங்கும் நேரங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. ஒரு சராசரி மனிதன் ஆரோக்கியமாக வாழக் குறைந்தது ஏழு மணி நேரமாவது உறங்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால், மற்ற விடயங்களுக்குக் காட்டும் முக்கியத்துவத்தை யாரும் தூக்கத்திற்குக் காட்டுவதில்லை.



"ஓய்வு நேரம் தானே, அதை விட நம் வேலை தானே முக்கியம், தூங்காவிட்டால் என்ன ஆகிவிட போகிறது?" என்ற அலட்சிய மனப்பான்மையுடன், தூங்க வேண்டிய நேரத்தில் தூக்கத்தைத் தவிர்த்து, வேறு வேலைகளில் ஈடுபட்டு, மிகவும் தாமதமாகத்தான் உறங்குகின்றனர். தூக்கம் என்பது வெறுமனே உடலின் ஓய்வு நேரம் மட்டுமல்ல அது நம் ஆரோக்கியம், அறிவுத்திறன் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கான மிக அத்தியாவசியமான செயல்முறையாகும்.

நிம்மதியான தூக்கத்தின் போதுதான் நம் உடலும் மூளையும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கின்றன. குறிப்பாக, நாம் விழித்திருக்கும் போது மூளையில் சேரும் தேவையற்ற மற்றும் நச்சுப் பொருட்களை (Metabolic Waste) அகற்றும் பணியைத் தூக்கத்தின்போதுதான் மூளை மேற்கொள்கிறது. இந்த நச்சுப் பொருட்கள் அகற்றப்படாவிட்டால், மூளையின் செயல்பாடு பாதிக்கப்படும்.

கவிஞர் ரஸீனா ரமீஸான், கண்டி, அக்குறணை

குறிப்பாக, ஆழ்ந்த உறக்கத்தின்போது, அன்றைய தினம் நாம் கற்றறிந்த தகவல்கள் மற்றும் நினைவுகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டு, நீண்ட கால நினைவுகளாகப் பதிய வைக்கப்படுகின்றன.

போதுமான தூக்கம் இல்லாவிட்டால், கவனம் செலுத்துதல், முடிவெடுத்தல், புதியன கற்றல் போன்ற அறிவாற்றல் செயல்பாடுகளில் சிக்கல் ஏற்படும். ஆரோக்கியமான உடலுக்கும், கூர்மையான அறிவுக்கும் தூக்கம் இன்றியமையாதது என்பதை நாம் உணர வேண்டும்.

தூக்கமின்மையானது மனச்சோர்வு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவது போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. தூக்கத்தின்போது உடல் தன்னைத்தானே சீரமைத்துக் கொள்வதால், நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. உடல் செல்களின் பழுதுபார்ப்பு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான வளர்ச்சி ஹார்மோன்கள் (Growth Hormone) அதிக அளவில் சுரக்கின்றன. மேலும், நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடும் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் வலிமைக்குத் தூக்கம் மிக அத்தியாவசியமானது.

தூக்கமின்மை தொடரும்போது, இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் ஏற்படுட வாய்ப்புகள் அதிகம் எனவே, தூக்கம் என்பது வெறும் ஓய்வெடுக்கும் நேரம் மட்டுமல்ல; அது உடலின் உள்கட்டமைப்புப் பணியை மேற்கொள்ளும் முக்கிய நேரமாகும்.


மனநலமும் தரமான தூக்கமும்

மனச்சோர்வு, பதட்டம் மற்றும் மன அழுத்தத்தைக் குறைப்பதில் தரமான தூக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆழ்ந்த உறக்கமானது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் திறனை மேம்படுத்துகிறது. இதனால், நாம் உணர்வுரீதியாக நிலைத்தன்மையுடன் செயல்பட முடிகிறது.

தூக்கம் குறையும்போது, மனநிலை சீர்குலைந்து, எரிச்சல், சோர்வு மற்றும் மனச்சோர்வு போன்ற உணர்வுகள் மேலோங்கி, மன ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, மனரீதியான ஆரோக்கியத்திற்கும், உணர்ச்சி சமநிலைக்கும் நிம்மதியான மற்றும் தரமான தூக்கம் மிகவும் அவசியம்.

நாம் வேலையில் காட்டும் அதே முக்கியத்துவத்தைத் தூக்கத்திற்கும் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். தினசரி நம்முடைய வேலைகளைத் திட்டமிடும்போதே, ஏழு முதல் எட்டு மணி நேரம் தரமான தூக்கத்திற்கான நேரத்தை ஒதுக்க வேண்டியது மிக மிக அவசியம்.

தூக்கம் என்பது நேரத்தை வீணாக செலவழிப்பது இல்லை. அது ஆரோக்கியம், அறிவு மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான சிறந்த மருந்து என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து, சரியான நேரத்தில் உறங்கி, உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைக் காப்பது இன்றைய நவீன வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகும்.



கவிஞர் ரஸீனா ரமீஸான், கண்டி, அக்குறணை

# தேடல் - 7 தனிமையின் நிழல் --02

மனித மனம் எப்போது மாறும், எப்போது அமைதி அடையும் — யாராலும் கூற முடியாது. அன்பின் அளவுக்கோல் எதிலும் குறிக்கப்படவில்லை. அதனால்தான் மனம் ஒருவரை நேசிக்கும் ஆழத்தைத் தொடும்போது, அதிலிருந்து வெளிவருவது எளிதல்ல.

நீங்களோ, உங்களில் யாரோ ஒருவரோ —ஒருவரை ஆழமாக நேசித்திருக்கலாம். அவர் இறந்தவராக இருந்தாலும், அல்லது பிரிந்தவராக இருந்தாலும் —அவரை நினைக்காமல் இருந்திருக்க முடியுமா? நாம் ஆழமாக நேசித்தவர் நம்முடன் இருந்தால், அவரை இழந்தது போல நினைத்து பார்க்க முடியுமா? இல்லை. அது இயலாது.



நாம் நேசித்தவர்கள் இனி இல்லாவிட்டாலும், அவர்களின் நினைவுகள் எங்கோ ஒரு வடிவில் தங்கி விடுகின்றன. ஒரு ஆடையின் வாசனையிலோ, ஒரு கதவின் சத்தத்திலோ,அல்லது ஒரு பழைய விருப்பத்தின் மணத்திலோ. அது நம் மனத்தின் ஆழத்தில் நிழலாக உலாவும். மௌனக் காற்றில் தேடிக்கொண்டு அலைவதாய் தோன்றும்.

அந்த உணர்வுகளை யாராலும், எதனாலும் மாறவோ மாற்றவோ முடியாது.சில உண்மைகளை நம் மனம் தளர்ந்து ஏற்க வேண்டும். மரணமோ பிரிவோ வந்தபின், அதை ஏற்றுக்கொள்ள நம் உள்ளம் மெல்ல பழகிக் கொள்கிறது.

ஆனால், ஆழமான பாசங்கள் சட்டென்று ஆறிவிடுவதில்லை. அவர்களின் குரல், சிரிப்பு, கலாய்ப்பு எல்லாம் நினைவில் மீண்டு வந்து, மனம் மீண்டும் அவர்களோடு பேசும்.

கவிஞர் சுஹைனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)


# தேடல் - 7 தனிமையின் நிழல் --02

"இல்லாதது இனி திரும்பாது" என்று உணர்ந்தபோதும், அதை ஏற்றுக்கொள்ளும் வரை தனிமை நிழலாக நம்மைச் சூழ்ந்திருக்கும்.

அந்த நிழலோடு நாமே உரையாடி, மன்னிப்பு கேட்டும், நினைவைச் சொல்லியும்,அன்பை மீண்டும் உயிர்ப்பிக்க முயல்கிறோம்.

அவ்வாறே நமது தேடல் தொடர்கிறது தனிமையின் நிழல்களுக்குள்.

தேடலாகும்...



கவிஞர் சுஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

### பிறப்பு,கல்வி



தெ. பொ. மீனாட்சி சுந்தரம் சென்னையில் உள்ள சிந்தாதிரிப்பேட்டையில் ஜனவரி 8,1901 அன்று பொன்னுசாமி கிராமணியாருக்கு மகனாகப் பிறந்தார். தந்தை பொன்னுசாமிக் கிராமணியார் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரான தி. க. சுப்பராய செட்டியாரிடம் தமிழ் பயின்றவர். தமிழ் மீதும் தமிழ் அறிஞர்கள் மீதும் இருந்த பற்றினால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பெயரை தன் மகனுக்கு இட்டார்.

தெ.பொ.மீ பள்ளிக்கல்வியை சிந்தாதிரிப்பேட்டையில் முடித்தார்.1920-ல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் 1922-ல் பி.எல். பட்டமும் பெற்றார். 1923-ல் வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1934-ல் பி.ஓ.எல் பட்டம் பெற்றார்.

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் வேதாந்த சங்கத்தை நடத்திய கோ. வடிவேலு செட்டியாரிடம் தருக்கம், வேதாந்தம், தமிழிலக்கியம் ஆகியவற்றைப் பயின்றார். கா.ர. கோவிந்தராச முதலியார், திருமணம் கே. செல்வகேசவராய முதலியார் போன்ற அறிஞர்களிடம் வேதாந்தமும் தமிழ் இலக்கியங்களும் கற்றார். இராமலிங்கத் தம்பிரானிடம் தணிகைப் புராணம் , சேது புராணம் ஆகியவற்றைக் கற்றார். மறைமலையடிகளிடம் சைவ சித்தாந்தத்தையும், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கரச்சாரியார், திருப்புறம்பியம் ராமசாமி நாயுடு மற்றும் சடகோபாச்சாரியார்

ஆகியோரிடம் வைணவத் தத்துவமும் பயின்றார். 1939-40 ஆண்டுகளில் தமிழ் வித்வான் இளநிலை, நிறைநிலைத் தேர்வுகள் எழுதி 'வித்வான்' பட்டம் பெற்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

### அமைப்புப்பணிகள்

தெபொமீ சென்னைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவி பத்துப்பாட்டு, தொல்காப்பியம் மாநாடுகளை நடத்தினார்.

### கல்விப் பணிகள்

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழகத்தின் புகழ்பெற்ற கல்வியாளர்களில் ஒருவர். நாற்பதாண்டுகாலம் தமிழகக் கல்வி வளர்ச்சிக்காகப் பணியாற்றினார்.

1924-ல் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியபோது சிந்தாதிரிப்பேட்டையிலும், சுற்றுப்புறங்களிலும் பல ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தி, அவற்றின் வளர்ச்சியை தொடர்ச்சியாக கண்காணித்தார்.

1936-ல் கோ. வடிவேலு செட்டியாரின் மரணத்திற்குப்பின் வேதாந்த சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். முதுகலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகள் எடுத்தல், சென்னைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி பல இலக்கிய மாநாடுகளை நடத்துதல் ஆகிய பணிகளை இக்காலகட்டத்தில் மேற்கொண்டார்.

1944-ல் ராஜா.சர்.அண்ணாமலை செட்டியாரால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டு 1946 வரை பணியாற்றினார்.

1954-ல் சென்னை மாநிலக் கல்லூரியின் தலைமைத் தமிழ் பேராசிரியராகப் பணியேற்று, ஒப்பிலக்கியத்தையும், கல்வெட்டு மொழி ஆய்வையும் பாடங்களாக்கினார். மீண்டும்

1958-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.

1945-ல்நடைபெற்ற அனைத்திந்திய வரலாற்று மாநாடு திராவிடப் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தை தலைவராக நியமித்தது.

1961ல் சிகாகோ பல்கலைகழகத்தில் தமிழ்த் துறை தொடங்கப்பட்டபோது தெ. பொ. மீனாட்சிசுந்தரம் வருகைதரு பேராசிரியராக அழைக்கப்பட்டு பத்து சொற்பொழிவுகள் தமிழ் மொழி வரலாற்றைப் பற்றியும் பத்து சொற்பொழிவுகள் தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் ஆற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அச்சொற்பொழிவுகளின் இறுதிவடிவம் ' A history of Tamil Language[1]' 'A history of Tamil literature' என்ற இரு நூல்களாக வெளியானது.

1963 முதல் 65 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் உயராய்வு மையத்தின் (Advanced Centre for Dravidian Linguistic) இயக்குனராகப் பணியாற்றி தமிழகத்தில் மொழியியல் கல்வி தனித்து வளர்வதற்கும் துறைசார் ஆய்வாளர்கள் பலரைத் தோற்றுவிக்கவும் காரணமானார்.

1966 முதல் 1971 வரை மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக பணியாற்றினார். மதுரை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக புதிய அறிவியல் துறைகள், உயிரியல், பொருளாதாரம், கணிதம் போன்ற துறைகளைத் தொடங்கினார். தமிழ்த்துறை தமிழியல் துறையாக அமையவும், ஒப்பிலக்கியத் துறை உருவாகவும் வழி

வகுத்தார். தொலைதூரக் கல்வியை அறிமுகப்படுத்தினார்.

1973-74-ம் ஆண்டுகளில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் கழகச் சிறப்பாய்வாளராக பொறுப்பேற்றார்.

1974 முதல் ஆழ்நிலைத் தியானத் தேசியக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

## இலக்கிய/தமிழியல் பணி

### கலைக்களஞ்சியம்

தெ, பொ. மீனாட்சிசுந்தரம் கலைக்களஞ்சியத்தில் தமிழ் எழுத்தியல், மொழியியல், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் 88 கட்டுரைகள் எழுதினார்.

### இலக்கிய ஆய்வு

தெபொமீ 'கலாநிலையம்', 'விவேக சூடாமணி', 'லோகோபகாரி', 'நவசக்தி' ஆகிய இதழ்களில் இலக்கியம், மொழியியல், தத்துவம் பற்றிய கட்டுரைகளை எழுதினார். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து, அதை "நாடகக் காப்பியம்" என்றும் "குடிமக்கள் காப்பியம்" என்றும் வரையறுத்தார். திருக்குறள் பற்றி 'வள்ளுவரும் மகளிரும்' ' 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' ஆகிய நூல்களை எழுதினார்
'தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவை' என்ற நூலில் தமிழ்நாட்டுச் சடங்குகளுக்கும், தாய்லாந்து நாட்டு சடங்குகளுக்கும் உள்ள ஒற்றுமையை இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளோடு விளக்கினார். தாய்லாந்தின் ஊஞ்சல் திருவிழா தமிழ்நாட்டின் பாவை நோன்புடனும் திருவெம்பாவை, திருப்பாவையுடனும் தொடர்புடையது என்பதை சான்றுகளுடன் நிறுவினார்.

## மொழியியல்

தமிழில் மொழியியல் துறையின் முன்னோடியாகக் கருதப்படும் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் மொழியியல் நோக்கில் மொழியை அணுகி ஆராயும்போது மொழியின் கட்டமைப்பையும் அது சமுதாயத்தில் வழங்கி வரும் முறையையும் காணலாம் என்பதைத் தன் ஆய்வுகளின் மூலம் அறியச் செய்தார்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் இலக்கண வரலாற்றை வடமொழி இலக்கணம், தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் தாக்கத்தின் அடிப்படையில் ஆய்வுசெய்தார்.

தெபொமீ தமிழ் மொழி எழுத்துக்களை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றியும், திருத்தியும், குறைத்தும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

"Rhythm of the common speech; Glorification by Bharathi" என்ற நூலில் பாரதியின் மொழிநடை தமிழ் மரபிலிருந்து எதைப் பெற்றுக்கொண்டது என்பதைஆராய்கிறார்.

நோம் சோம்ஸ்கியின்( Noam Chomsky) மாற்றிலக்கணம் ( transformational grammar) என்ற கோட்பாட்டை தமிழுக்கு அறிமுகம் செய்யும் முகமாக தமிழ் எடுத்துக்காட்டுகளுடன் 'மாற்றிலக்கணம்' என்ற நூலை எழுதினார்.

## அறிவியல் தமிழ்

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தமிழ் வழிக் கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தார். ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கை போன்ற அறிவியல் தத்துவங்களைத் தமிழில் எழுதினார்.

## படைப்புகள்

- வள்ளுவரும் மகளிரும்
- கால்டுவெல் ஒப்பிலக்கணம்
- நீங்களும் சுவையுங்கள்
- பிறந்தது எப்படியோ?
- சமணத்தமிழ் இலக்கிய வரலாறு
- தமிழ் மணம்
- வாழும் கலை
- தமிழ் இலக்கிய வரலாறு
- பத்துப்பாட்டு ஆய்வு
- பிறந்தது எப்படியோ,
- சமணத் தமிழிலக்கியம்
- அச்சொற்கள்
- ஆங்கில நூல்கள்
- A History of Tamil Literature
- Philosophy of Thiruvalluvar
- Advaita in Tamil
- Tamil - A Bird's eye view
- அன்பு முடி
- தமிழா நினைத்துப்பார்
- வள்ளுவர் கண்ட நாடும் காமமும்
- கானல்வரி
- கல்விச் சிந்தனைகள்
- தமிழும் பிற பண்பாடும்
- தமிழ் மொழி வரலாறு
- மொழியியல் விளையாட்டுக்கள்
- குடிமக்கள் காப்பியம்,
- தமிழா நினைத்துப்பார்
- குசேலர்.
- மனோதத்துவ சாத்திரம்
- A History of Tamil Language

## இறப்பு

தெ. பொ. மீனாட்சிசுந்தரம் ஆகஸ்ட் 27, 1980 அன்று சென்னையில் புற்றுநோயால் காலமானார்.

## நன்றி

https://tamil.wiki/wiki

# நாளை நமதே

## பிறரை பாராட்ட

## ஆர்வம் இருக்கும் வரை

## நீ பாராட்டக் கூடிய இடத்திற்கு

## சென்று கொண்டே இருப்பாய்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com